# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.61/2020

2025 -ம் ஆண்டு ஜுன் மாதம் 25 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 25.06.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜ்குமார் (PW-1) | வயது | : | 43/2025 |
| க/த பெயர் | : | திரு.துரைராஜ் | தொழில் | : | டீ மாஸ்டர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது பிறந்த தேதி என்னவென்றால் 09.10.1982. தாவா சொத்தானது எனக்கு எந்த வயதில் கிடைத்தது என்றால் 5 வயதில் எனது தாத்தா சின்னபிள்ளை எழுதிக்கொடுத்தார். 1987 ல் எழுதி கொடுத்திருப்பார் என்றால் ஆமாம். உயில் மூலமாக எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். உயில் எழுதிய சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் கதவு எண்.04/2852, தெற்கு தெரு, அசேஷம். நான் பிறந்ததே அசேஷம் தெருவில் உள்ள வீட்டில்தானா என்றால் ஆமாம்.

தாவா சொத்திற்கும், நான் பிறந்த வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளவாறு பாலயங்கோட்டை கிராமத்தில்தான் பிறந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் மேஜர் ஆன பின்புதான் அசேஷம் வந்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் மேஜர் ஆன பின்பு அசேஷம் வந்ததாக சொல்லிய விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் மே மாதம் 2005 ல் காதல் திருமணம் நடந்தது, தேதி ஞாபகம் இல்லை. எனது திருமணம் பதிவு செய்யப்பட்டதா என்றால்

இல்லை. காதல் திருமணம் செய்ததால் கோவில் வைத்து திருமணம் செய்தேனா அல்லது வீட்டில் செய்தேனா என்றால் தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் திருமணம் நடந்தது.

என் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் அக்கா சீத்தாலெட்சுமி, தம்பி ராஜேஷ். தம்பி ராஜேஷ் இறந்து விட்டார். எனது திருமணத்திற்கு எனது உடன் பிறந்தவர்கள் வந்தார்களா என்றால் எதிர்ப்பு தெரிவித்ததால் வரவில்லை. எந்த நாள் வரை வரவில்லை என்றால் இந்த நாள் வரை அவர்கள் வரவில்லை. 1ம் பிரதிவாதி வீரய்யன் இந்நீதிமன்றத்தில் என்ன வழக்கு எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் என்றால் தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு எழுதி தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

என்னுடைய சொத்தை ஏன் 1ம் பிரதிவாதிக்கு எழுதி தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தில் தங்கி இருப்பதால் சொத்து எழுதி தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்த வருடம் இடத்தை எழுதி கேட்டார் என்றால் 2010 ல் கேட்டார். 1ம் பிரதிவாதி எனது உறவினரா என்றால் உறவினர் இல்லை. எனது தெருவை சேர்ந்தவர். 1ம் பிரதிவாதியானவர் எனது சமூகத்தை சேர்ந்தவர், எனது உறவினர் என்பதை இந்த வழக்கிற்காக எனது சமூகத்தை சேர்ந்தவர் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சகோதரி கல்யாணி என்று சொல்லியுள்ளதால் யார் அந்த கல்யாணி என்றால் உடன் பிறவா சகோதரி. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சகோதரி கல்யாணி வீட்டில் குடும்பம் நடத்தி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கல்யாணி வீட்டில் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை குடும்பம் நடத்தி வந்தேன் என்றால் 2005 முதல் 2010 வரை. சகோதரி கல்யாணி தற்போது உள்ளார் என்றால் உயிருடன் உள்ளார்.

சகோதரி கல்யாணியை இந்த வழக்கில் எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியாது. தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு ரூ.17,000/- என கிரயம் பேசி 21.04.2005 ல் ரூ.15 ஆயிரத்தை முன் பணமாக பெற்றுக்கொண்டு மீதமுள்ள ரூ.2000/-ஐ பிறகு தருவதாக சொல்லி வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும் கிரயம் பேசி முடிக்கப்பட்டு அதே சொத்தினை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டு தற்போது வழக்கிற்காக அந்த விபரத்தை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

21.04.2005 ல் ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின்படி மீதமுள்ள ரூ.2000/-ஐ என்னிடம் கொடுத்து கிரயத்தை பதிவு செய்ய 1ம் பிரதிவாதியானவர் பலமுறை என்னை அழைத்தும் நான் அப்போது ஊரில் இல்லாததால் கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 21.04.2005 ல் ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின்படி மீதமுள்ள ரூ.2000/-ஐ வாங்கிக் கொண்டு தாவா சொத்தை கிரய பதிவு செய்து கொடுக்குமாறு 1ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எப்போதாவது எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை, கேவியட் மனு அனுப்பினார்.

**(பிரதிவாதியின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 17:04:53 +0530

District Munsif
Mannargudi.